# 25

# "தேவனுடைய இரங்கல் பத்தி"

## (6:1-4)

*நமது படிப்பின் புதியதொரு பகுதியை நாம் தொடங்குகிறோம். நாம் "ஆக்கினைத்தீர்ப்பை" படித்து, எல்லாரும் பாவம்செய்து தேவனுடைய நீதி தேவைப்படும் நிலையில் இருப்பதைக் கண்டோம். "நீதிமான்களாக்குதல்" என்று நாம் அழைத்த அடுத்த பகுதியில், மக்களை நீதிமான்களென்று எண்ணுவதற்குத் தேவனுடைய ஏற்பாட்டைப் பவுல் விளக்கப்படுத்தினார். நாம் "பரிசுத்தமாக்கப் படுதல்" என்ற பகுதிக்குக் கடந்துசெல்லத் தயாராகிறோம்.*

*பவுல், ரோமருக்கு நிருபத்தை எழுதுவதற்குக் கூறும்போது அவருக்கு முன்னால் வரைகுறிப்பு இருக்கவில்லை. நிருபத்தில் தீர்க்கமான பிரிவுகள் இல்லை. அவர் சிந்தனையில் இருந்து சிந்தனைக்குக் கடந்தார், சிலவேளைகளில் புதிய ஒரு கலந்துரையாடலைத் தொடங்குமுன்னர் முந்திய கலந்துரையாடலுக்குத் திரும்பினார். இந்தக் காரணத்தினால், பிரிவுகள் ஒன்றின்மேல் ஒன்று கவிந்திருப் பதை நாம் காண்கிறோம். இருந்தபோதிலும், இந்த நிருபத்தின் பல்வேறு பகுதி களில் பவுலின் வலியுறுத்தத்தை உற்று நோக்குவதில் மதிப்புள்ளது.*

### புதிய தலைப்பின்மீது குறிப்புகள்

*நாம் 6 மற்றும் 7ம் அதிகாரங்களை, "பரிசுத்தமாகுதல்" மீதான பவுலின் போதனை என்று வகைப்படுத்தியுள்ளோம். NASB வேதாகமத்தில் "பரிசுத்த மாகுதல்" என்ற வார்த்தை இந்த அதிகாரங்களில் இருமுறை காணப்படுகிறது:*

> *முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத் திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்த மானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள் (6:19).*
>
> *இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன் (6:22).*

*"பரிசுத்தமாகுதல்" என்பது பொதுவான பயன்பாட்டில் உள்ள வார்த்தையல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னர், கிளென் வாலெஸ் என்பவர், டெக்ஸாஸில் உள்ள கிளெபர்ன் நகரின் மையப்பகுதி கிறிஸ்துவின் சபையில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அவர் தமது அறிமுகக் குறிப்புகளில், "இன்று நான் பரிசுத்தமாகுதல் பற்றிப் பிரசங்கிக்கப் போகிறேன். பரிசுத்தமாக்கப் பட்டவர்கள் ஒவ்வொருவரும் தயவுசெய்து எழுந்து நில்லுங்கள்" என்று கூறினார். நானூறுக்கும் மேற்பட்டவர்கள் அங்கிருந்தனர், ஆனால் ஒரே ஒரு*

மூப்பரும் ஒரு பிரசங்கியாரும் மாத்திரமே எழுந்து நின்றனர்.[1] பெரும்பான்மை யானவர்கள், தாங்கள் பரிசுத்தமாக்கப்பட்டார்களா இல்லையா என்பது பற்றி நிச்சயமற்று இருந்தனர்.

"பரிசுத்தமாகுதல்" என்பது, *hagios* என்பதிலிருந்து வருகிற *hagiasmos* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.[2] இவ்வார்த்தை "பரிசுத்த மாக்கப்படுதல்" அல்லது "பரிசுத்தம்" என்று மொழிபெயர்க்கப்படக்கூடும். *6:19, 22*ல், "sanctification" என்பதற்குப் பதில், ஆங்கில வேதாகமத்தின் பல மொழி பெயர்ப்புகள் "holiness" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன (KJV; NIV ஆகிய வேதாகமங்களில் காணவும்).

புறதெய்வ வணக்க மதங்களில், *hagios* என்பது "தேவர்களுக்கு" *அர்ப்பணிக்கப்பட்டிருந்தவற்றைக்* குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. இது பின்வரும் பொதுவான அர்த்தம்கொள்ள வந்தது: "பிரித்து வைக்கப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்பட்ட பொருள்/நபர்." இதைக் கிறிஸ்தவர்களுக்கு நடைமுறைப்படுத்தும்போது, இது தேவனால் அவரது பரிசுத்த நோக்கங்களுக்காக "ஒதுக்கி வைக்கப்"பட்டிருத்தலை குறிக்கிறது. இவ்வாறாக, ரோமர் *6:19, 22*ல் CJB வேதாகமத்தில், "being made holy, set apart for God" ("பரிசுத்தமாக்கப்படுதல், தேவனுக்காக ஒதுக்கி வைக்கப்படுதல்") என்றுள்ளது.

"பரிசுத்தமாகுதல்" (*hagiasmos*) என்பது புதிய ஏற்பாட்டில் இரண்டு முதன்மை வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது, இது தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாக்கி, உலகத்திலிருந்து பிரித்து வைத்தலைக் குறிக்கிறது (கொலோசெயர் *1:13, 14*ஐக் காணவும்). எனவே இரட்சிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும், "பரிசுத்தமாக்கப்பட்டுள்ளனர்"; ஒவ்வொருவரும் "பரிசுத்தவானாக" உள்ளனர் (ரோமர் *1:2; 1* கொரிந்தியர் *1:2* ஆகிய வசனங்களைக் காணவும்). சகோதரர் வாலெஸ் அவர்கள் பரிசுத்த மாக்கப்பட்டிருந்தவர்களை எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொண்டபோது, அங்கிருந்த எல்லாக் கிறிஸ்தவர்களும் எழுந்து நிற்க உரிமை கொண்டிருந்தனர்.

இருப்பினும், "பரிசுத்தமாகுதல்" என்ற வார்த்தை, புதிய ஏற்பாட்டில் இன்னொரு கருத்திலும் பயன்படுத்தப்படுகிறது. இது மனமாற்றத்தின்போது நிகழ்த்தப்படுகிற *தெய்வீக செயல்முறையை* மாத்திரம் அல்ல, ஆனால் வாழ்நாள் முழுவதிலும் நடைபெறும் ஒரு *அன்றாட செயல்முறையையும்* குறிக்கக்கூடும் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர். தமது வாசகர்களை, "... பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று வற்புறுத்தி வேண்டினார் (எபிரெயர் *12:14*). கிறிஸ்தவர்களாகிய வேளையில், பவுலின் வாசகர்கள் தேவனால் "பிரித்து வைக்கப்"பட்டிருந்தனர். இப்போது அவர்கள் பிரித்து வைக்கப்பட்ட தனிநபர்களாக *வாழ்தல்* தேவையாயிருந்தது.

இந்த இரண்டாவது கருத்தில்தான் நமது வரைகுறிப்பில், நாம் "பரிசுத்த மாகுதல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர், நீதிமானாக்கப்படுதல் என்பது *சரியாக்கப்பட்டிருத்தலைப் பற்றியதாக* உள்ளது, அதே வேளையில் பரிசுத்தமாகுதல் என்பது *சரியாக வாழ்தலைப்* பற்றியதாக உள்ளது என்று கூறினார்.[3] R. C. பெல் என்பவர் இதை வேறொரு வகையில் உரைத்தார். அவர் நீதிமானாக்கப்படுதல் என்பது "*நமக்காக* ஒரு தெய்வீகக் கிரியையாக" உள்ளது, அதே வேளையில் பரிசுத்தமாகுதல் என்பது

"*நமக்குள்* ஒரு தெய்வீகக் கிரியையாக" உள்ளது என்று கூறினார்.[4]

ரோமர் 6 மற்றும் 7ம் அதிகாரங்கள், பரிசுத்தமாகுதலின் *கொள்கை விதியை* நிலைநாட்டுகின்றன. இந்த அதிகாரங்கள் பரிசுத்தமாகுதல் ''ஏன்'' என்பதுபற்றிக் கவனத்தை ஒருமுகப்படுத்துகின்றன: கிறிஸ்தவர்கள் பரிசுத்த மான மற்றும் பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்வை வாழ வேண்டியது ஏன்? இந்த நிருபத்தின் பிற்பகுதியில் 12 முதல் 16ம் அதிகாரம் வரையில், பவுல் பரிசுத்த மாகுதலின் *நடைமுறைகள் பற்றிக்* கவனம் குவித்து, பரிசுத்தமாக்கப்பட்ட நபர் *எவ்வாறு* வாழ்கிறார் என்பதற்கு நடைமுறை உதாரணங்களைக் கொடுத்தார். நிருபத்தின் அந்தக் கடைசிப்பகுதியானது பின்வருவதுபோன்று தொடங்குகிறது: "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் *பரிசுத்தமும்* [பரிசுத்தமாக்கப்பட்டதும்] தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; ..." (12:1).

### இந்தப் பாடத்தின்மீதான குறிப்புகள்

இந்தப்பாடம், 6:1-4 வசனப்பகுதியை விளக்கியுரைத்து பரிசுத்தமாகுதல் என்ற பாடக்கருத்திற்கு முன்னுரையாகப் பணியாற்றும். இந்த அதிகாரத்தின் முதல் பகுதியில் மரணத்தின்மீது பவுலின் வலியுறுத்தத்தின் காரணமாக, நான் இந்த எடுத்துரைப்பை, "தேவனுடைய இரங்கல் பத்தி" என்று அழைக்கிறேன்.[5] 6ம் அதிகாரத்தின் முதல் பதினோரு வசனங்களை முழுவதும் வாசித்து, ''மரித்து,'' ''மரித்தோர்,'' மற்றும் ''மரணம்'' என்ற வார்த்தைகளை அப்போஸ்தலர் எவ்வளவு அடிக்கடி பயன்படுத்தினார் என்பதைக் கவனியுங்கள்.

அமெரிக்க நாட்டில், உள்ளூர் செய்தித்தாளில் பொதுவாக, சமூகத்தில் சமீபத்தில் நடந்த இறப்புகள் பற்றி அறிவிக்கும் பகுதியான, இரங்கல் பத்தி இடம் பெறுவது வழக்கமாகும்.[6] எனது மனைவி, செய்தித்தாளில் முதலில் வாசிக்கும் பகுதிகளில் ஒன்றாக இது உள்ளது. நாங்கள் டெக்ஸாஸின் கிளெபர்ன் என்ற நகரில் வாழ்ந்தபோது, ஒருநாள் காலைப்பொழுதில் அவர்கள், டேவிட் ரோப்பர் மரித்தார் மற்றும் அவரது சவ அடக்கம் உள்ளூர் கிறிஸ்துவின் சபையின் கூடுகை இடத்தில் நடைபெறும் என்று செய்தித்தாளில் வாசித்துத் திகைப்படைந்தார். அது இன்னொரு டேவிட் ரோப்பர் என்பது தெரியவந்தது; ஆனால் இறந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் பத்தியில் அவர்கள் என் பெயரைக் காண்பித்தவேளை என்பது இன்னமும் மன உளைச்சல் தருவதாகவே இருந்தது.

இருப்பினும், பவுல் தமது பெயர் "தேவனுடைய இரங்கல் பத்தியில்" காணப்பட்டதுபற்றி மகிழ்ச்சி கொண்டார். மேலும், அவர் *உங்கள்* பெயரும் என் பெயரும் அந்த "இரங்கல் பத்தியில்" காணப்பட வேண்டும் என்று விரும்பினார் - ஏனென்றால் *பாவத்திற்கு மரித்தல்* என்பதே அவரது வலியுறுத்தமாக இருந்தது. நமது பாடத்தைத் தொடர்ந்து படிக்கையில், நான் அர்த்தப்படுத்துவது என்ன என்பதை நீங்கள் காண்பீர்கள்.

## ஒரு கேள்வியும் ஒரு பதிலும் (6:1, 2)

ரோமருக்கு நிருபத்தை எழுதியதில், பவுல் அடிக்கடி மறுப்புகளை, பொதுவாக யூதர்களிடமிருந்து மறுப்புகளை முன்னெதிர்நோக்கினார். இந்த அதிகாரத்தில் அவர் திரும்பவும் மறுப்புகளை முன்னெதிர் நோக்கினார்,

*மற்றும் அவரது "மறுப்பாளர்கள்" அனேகமாக ஒரு யூதப் பிண்ணனியைக் கொண்டிருக்கக்கூடும் (6:15; 7:7ஐக் காணவும்) - ஆனால், அவர் ஞானஸ்நானம் பெற்றிருந்த விசுவாசிகளுக்குத் தமது குறிப்புரைகளை உரைத்தார் (வசனங்கள 4-11ஐக் காணவும்).*

**ஒரு கேள்வி**

*இந்த அதிகாரம், "ஆகையால் என்னசொல்லுவோம்?" என்று தொடங்குகிறது (வசனம் 1அ). அதாவது, "முன்பு கூறப்பட்டவை குறித்து நாம் என்ன சொல்லு வோம்?" அவர் அப்போதுதான் "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிக மாய்ப் பெருகிற்று" என்று அறிவித்திருந்தார் (5:20). இப்போது அவர் ஒரு பதிலை எதிர்நோக்கினர்: "கிருபை அதிகமாய்ப் பெருகும்படிக்கு நாம் தொடர்ந்து பாவத்தில் நிலைத்திருக்க வேண்டுமா?" (6:1ஆ). இந்தக் கேள்வியில் ஒரு பிறழ்வுநிலை தர்க்கம் உள்ளது: "பாவம் கிருபையைப் பெருகச் செய்வதால், அதிக பாவம் என்றால் அதிக கிருபை என்று அர்த்தமாகிறது. அதிக கிருபை நல்ல தாக உள்ளது என்பதால், அதிக பாவமும் நல்லதாகவே இருக்க வேண்டும்."*

*மக்கள் இதுபோல் விவாதம் செய்கின்றனரா? அப்படியே செய்கின்றனர் என்பது உறுதி. குறிப்பிடத்தக்க வரலாற்று உதாரணமாக, ருஷ்யாவின் சரீனா அலெக்சான்டிராவின்மீது மிகவும் நம்பிக்கையாக இருந்த ருஷ்யநாட்டுத் துறவியான கிரிகோரி ரஸ்புட்டின் (கி.பி. 1872-1916) என்பவரைக் கூறலாம்.[7] ரஸ்புட்டின் தனது தேவபக்தியற்ற வாழ்வையும் அவகேடான நடக்கையையும் பின்வருமாறு நியாயப்படுத்தினான்:*

*(1) பாவம் செய்கிறவர்களுக்கு அதிகம் மன்னிப்பு தேவைப்படுகிறது.*
*(2) மக்கள் மனந்திரும்புகிறபோது அவர்களைத் தேவன் மன்னிக்கிறார்.*
*(3) இவ்வாறு, அதிகமாய்ப் பாவம் செய்து, பின்பு மனந்திரும்புகிறவர் மற்ற பாவிகளைக் காட்டிலும் அதிகமாகத் தேவனுடைய மன்னிக்கும் கிருபையை மகிழ்வுடன் அனுபவிக்கிறார்.*

*இருப்பினும், வரலாற்றில் ஒரு உதாரணத்தைக் காணுதல் என்பது தேவையற்றதாக உள்ளது. கிளென் பேஸ் என்பவர், தம்மிடத்தில் மன எழுச்சியுடன், "நான் இப்போது கிருபையைக் கண்டுபிடித்துள்ளேன்!" என்று கூறிய ஒரு நண்பரைப் பற்றிக் கூறினார். அந்த மனிதர் பிற்பாடு தமது மனைவியைக் கைவிட்டுவிட்டார். அவர் கிளென்னிடத்தில், "ஆம், இது பாவம் என்று வேதாகமம் கூறுவதை நான் அறிவேன், ஆனால் அதைக் கிருபையானது மூடிவிடும்" என்று கூறினார்.[8]*

*வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களிலும் மக்கள் இதேபோல விவாதம் செய்து கொண்டிருந்தனர் என்பது தெளிவு. யூதா, "நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாக புரட்டிய"வர்களைக் குறித்து எழுதினார் (யூதா 4; கலாத்தியர் 5:13ஐக் காணவும்). டயட்ரிக் பான்ஹோஃபர் என்பவர் தேவனுடைய இரக்கத்தைக் குறித்து அற்பமான எண்ணப்போக்கை விவரிக்க "மலிவான கிருபை"[9] என்ற சொற்றொடரை உருவாக்கினார். அவர் கிருபை என்பது விலைமலிவானதாக இருப்பதற்குப் பதில் விலையேறப்பெற்றதாக உள்ளது என்று எழுதினார்: அது "நாம் பின்பற்றும்படி நம்மை அழைப்பதால்*

விலையேறப்பெற்றதாக உள்ளது,'' ஆனால் அது "இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும்படி நம்மை அழைப்பதால்" கிருபையாக நிலைத்துள்ளது.[10]

பவுலின் "எதிர்ப்பார்ப்பாளர்" தேவபக்தியற்ற வாழ்வை நியாயப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தாரா? ஒருவேளை அவ்வாறிருக்கலாம் - ஆனால் அப்படிப்பட்ட விவாதம் பயன்படுத்தப்பட்டது அந்த அப்போஸ்தலரின் மதிப்பைக் குலையச் செய்ய முயற்சித்ததாக இருக்கும். 3ம் அதிகாரத்தில் பவுல் பின்வருமாறு வெடிப்பதை நாம் கண்டோம்: "நன்மை வரும்படிக்குத் தீமை செய்யலாம் என்று சொல்லலாமல்லவா?" (வசனம் 8) (இது நம்மைப்பற்றித் தவறாகச் செய்யப்படுகிற அறிக்கை யாக மற்றும் நாம் இவ்வாறு கூறுகிறோம் என்று சிலர் உரிமைகோருவதாக உள்ளது). சிலர் கிருபை பற்றிய பவுலின் போதனை மக்களைப் பாவம் செய்யத்தூண்டுகிறது என்று தீர்மானித்தனர். அப்படிப்பட்ட விவாதத்தினால் அவர்கள், பவுல் தவறைப் போதிப்பவராக இருந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.

**ஒரு பதில்**

"கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல் லுவோமா?" என்ற கேள்விக்குப் பவுல் எவ்வாறு பதில் அளித்தார்? (6:1ஆ). அப்படிப்பட்ட விசாரணையின் மறைவான கருத்து அவரை அதிர்ச்சியடையச் செய்தது. "கூடாதே" (வசனம் 1இ). பிலிப்ஸ் வேதாகமத்தில், "what a ghastly thought!" ("என்ன ஒரு கோரமான சிந்தனை!") என்றுள்ளது.

ரோமர் 6ல், பவுல் கிறிஸ்தவர்கள் பாவத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்குப் பல காரணங்களை முன்வைத்தார். கிறிஸ்தவர்கள் "பாவத்திற்கு மரித்துள்ளனர்" என்பது அவற்றில் முதல் காரணமாக உள்ளது. பவுல், "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்று கேட்டார் (வசனம் 2).

"இரண்டு ஆதாம்கள்" என்ற பாடத்தில் நாம் "மரணம்" (*thanatos*) என்ற வார்த்தையின் அர்த்தம் பற்றிக் கலந்துரையாடினோம். ரோமர் 6ல் பவுல் உடல்ரீதியான மரணத்தை மனமாற்றத்துடன் ஒப்பிட்டு, "மரணம்" என்ற வார்த்தைக்கு ஒரு உருவகத்தைப் பயன்படுத்தினார். இறந்துபோன மிருகம் ஒன்றைப் பற்றி நினைத்துப் பாருங்கள். நீங்கள் அந்த மிருகத்திற்கு மிகவும் பிரிய மான உணவை அதன் முன்பாக வைக்கக்கூடும், ஆனால் அது பதில்செயல் செய்வ தில்லை. அதுதான் *இறந்துபோயிருக்கிறதே.* அதுபோலவே, ஒரு கருத்தமைவில், *நீங்கள்* மரித்திருக்கிறீர்கள் மற்றும் இதனால் பாவம் உங்களைத் தேவனிடத்தில் இருந்து புறம்பே வசீகரிக்க முயற்சிசெய்கிறபோது நீங்கள் அதற்குப் பதில்செயல் செய்யக்கூடாது.

எல்லா உருவகங்களைப் போலவே, இந்த உருவகமும் மிகவும் அதிகமாக வலியுறுத்தப்படக் கூடாது. இறந்துபோன ஒரு மிருகம் ஒரு தூண்டலுக்குப் பதில்செயல் செய்யத் *திராணியற்றதாக* உள்ளது, ஆனால் ஒரு கிறிஸ்தவர் சோதனைக்குப் பதில்செயல் செய்யத் திராணியற்றவராக இருக்கிறார் என்று கூற பவுல் நோக்கங்கொண்டிருக்க வில்லை. அதற்கு நேர்மாறாக, அவர் தமது கிறிஸ்தவ வாசகர்களுக்கு, அவர்கள் பாவத்திற்கு மரித்திருந்த*படியால்,* அவர்கள் சாவுக்கேதுவான தங்கள் சரீரங்களில் பாவம் ஆளுகை *செய்யும்படிக்கு* அதன் இச்சைகளுக்குக் கீழ்ப்படியக்கூடாது என்று கூறினார். அவர்கள் தங்கள் சரீரங்களின் அவயவங்களை அநீதியின் கருவிகளாக *முன்வைக்கக் கூடாது* (வசனங்கள் 11-13). இந்தச் சூழ்நிலையானது அடிக்கடி

பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: "நாம் பாவத்திற்கு மரித்திருக்கிறோம், ஆனால் பாவம் நமக்கு மரித்திருக்கவில்லை."

கிறிஸ்தவர்கள் பாவம் செய்ய *இயலாது* என்று பவுல் கூறவில்லை, ஆனால் அவர்கள் பாவம் செய்ய*க்கூடாது* என்றே அவர் கூறினார். பாவம் நிறைந்த வாழ்வுநடையானது, பாவத்திற்கு மரித்துள்ள புதிய நிலைக்குச் *சீர்பொருத்த மற்றதாக* உள்ளது. ஜிம் ஹில்ட்டன் என்பவர், "பல கிறிஸ்தவர்கள் [பாவத்திற்கு] மரித்துள்ளனர், ஆனால் அதை அவர்கள் அறிந்திருப்பதில்லை. அதனால்தான் ... அவர்கள் அதைக் காண்பிப்பதில்லை" என்று எழுதினார்.[11]

இந்த சந்தர்ப்பப்பொருளில் பவுல் மரணம் என்ற உருவகத்தைப் பயன்படுத்தியது ஏன்? இயேசுவின் சிலுவைக்கு மனமாற்றத்தைப் பிணைப்பதே அவரது முதன்மை நோக்கமாக இருந்தது. கிறிஸ்து பாவி*களுக்காக* மரித்தது போலவே (5:6-8), நாம் பா*வத்திற்*கு மரிக்க வேண்டும். கிருபையினால் இரட்சிக்கப்பட்டவரின் நிலையில் ஏற்படும் நாடகத்துவமான மாற்றத்தை அடிக்கோடிட்டுக் காண்பிப்பதற்காகவும் பவுல் இந்த உருவகத்தைப் பயன்படுத்தி யிருக்கலாம். உடல்ரீதியான மரணத்தினால் செயல்விளைவு ஏற்படுத்துதல் என்பதைக் காட்டிலும் அதிகம் நாடகத்துவமான மற்றும் முற்றிலுமான ஒரு மாற்றம் பற்றி நினைத்துப் பார்த்தல் என்பது கடினமாயிருக்கும்.

## ஒரு செயலும் ஒரு விளைவும் (6:3, 4)

அது நம்மை ஒரு முக்கியமான கேள்விக்குக் கொண்டு வருகிறது: நாம் *எவ்வாறு* மற்றும் *எப்போது* "பாவத்திற்கு மரிக்கிறோம்"? பல காரணிகள் குறிப்பிடப்படலாம். நமது பாவங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தன என்பதை நாம் உணர்ந்தறிகிறபோது பாவத்தைக் குறித்த நமது மாற்றம்பெற்ற எண்ணப்போக்கைப் பற்றி நாம் பேசமுடியும் (1 கொரிந்தியர் 15:3ஐக் காணவும்). விசுவாசமும் மனந்திரும்புதலும், தேவபக்தியுள்ள வாழ்வை வாழ்வதற்கான விருப்பத்தை எவ்வாறு உண்டாக்குகின்றன என்று நாம் கலந்துரையாடமுடியும் (நடபடிகள் 26:20ஐக் காணவும்). நிச்சயமாகவே, நாம் தேவனுடைய ஆவியானவர் எவ்வாறு, "சரீரத்தின் செய்கைகளை அழிப்பதில்" உதவுகிறார் என்பதைப் பற்றிக் குறிப்பிடமுடியும் மற்றும் அதைக் குறிப்பிட வேண்டும் (ரோமர் 8:13).

### ஒரு செயல்

இருப்பினும், பவுல் தமது சிந்தையில் குறிப்பிட்ட சில விஷயத்தைக் கொண்டிருந்தார். அவர், "நாம் பாவத்திற்கு மரித்து" என்று கூறியபோது, தாம் எதை அர்த்தப்படுத்தினார் என்பது பற்றிச் சந்தேகத்திற்கு இடமாக அவர் எதையும் விட்டு வைக்கவில்லை. அவர் உடனடியாக சிலுவைக்கு நமது தொடக்கப் பதில் செயலின் உச்சநிலைக்குச் சென்றார்: அது ஞானஸ்நானம்.

> கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர் களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (6:3, 4).

ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "நாம் பாவத்திற்கு மரித்துள்ள *வகையான* நமது ஞானஸ்நானமானது நம்மைக் கிறிஸ்துவின் மரணத்தில் அவருடன் ஒன்றிணைத்துள்ளது" என்று குறிப்பிட்டார்.[12]

இந்த நிருபத்தில் இவ்விடத்தில்தான் முதன்முறையாக "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையை நாம் காண்கிறோம், எனவே வார்த்தை பற்றிய ஒரு சுருக்கமான படிப்பு இங்கு முறையானதாக உள்ளது. "ஞானஸ்நானம்" என்பது *baptisma* அல்லது *baptismos* என்ற கிரேக்கச் சொற்றொடரிலிருந்து வருவதாக இருக்கையில், "ஞானஸ்நானப்படுத்துதல்" என்பது *baptizo* என்ற வார்த்தையிலிருந்து வருவதாக உள்ளது. இவை ஒவ்வொன்றிற்கும், "முழுக்காட்டுதல்" என்று அர்த்தப்படும் *bapto* என்பது வேர் வார்த்தையாக உள்ளது. *Baptizo* என்பது "முழுக்காட்ட அமிழ்த்த" என்று அர்த்தப்படுகிறது. *Baptisma* என்பது "முழுக்காட்டுதல்" என்று அர்த்தப்படுகிறது மற்றும் *baptismos* என்பது முழுக்காட்டும் *செயலைக்* குறிக்கிறது.[13] "வரலாற்றாளர்கள், தொடக்ககால சபையில் முழுக்காட்டப்படுதல் என்பதே ஞானஸ்நானத்தின் வகையாக இருந்தது என்பதில் கருத்து ஒருமைப்படுகின்றனர்."[14] இவ்வாறாக *6:3, 4*ஐ CJB வேதாகமம் பின்வருமாறு மொழிபெயர்க்கிறது: "Don't you know that those of us who have been *immersed* into the Messiah [Jesus] have been *immersed* into his death? Through immersion into his death we were burried with him ..." ("மேசியா [இயேசு]வுக்குள்ளாக முழுக்காட்டப்பட்ட நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக முழுக்காட்டப் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? ... அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் முழுக்காட்டுதலினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்."

இது ஞானஸ்நானத்தின் தனிச்சிறப்புபற்றிய வல்லமைநிறைந்த வசனப்பகுதியாக இருப்பதால், ஒரு சில எழுத்தாளர்கள், "ஆவிக்குரிய" ஞானஸ்நானம், அல்லது ஒருவேளை "ஆவியானவருக்குள்ளாக" ஞானஸ்நானம் பெறுதல் என்பதை இவ்வசனங்கள் குறிப்பிடுவதாக ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். இருந்தபோதிலும், புகழ்பெற்ற கல்வியாளர்கள் பிரதான கட்டளையின் ஞானஸ்நானமாகிய *தண்ணீர்* ஞானஸ்நானத்தையே பவுல் தமது சிந்தனையில் கொண்டிருந்தார் என்று ஒப்புக்கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக, டக்ளஸ் J. மூ என்பவர், "கிறிஸ்தவத் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிப்பதற்குப் பவுல் வழக்கமாக *baptizo* என்ற வினைச்சொல்லையே பயன்படுத்துகிறார். ... மேலும் 4ம் வசனத்தில் உள்ள 'baptism' (Gk. *baptisma*) என்ற பெயர்ச்சொல்லானது எப்போதுமே ஏறக்குறைய இந்த அர்த்தத்தையே கொண்டுள்ளது" என்று எழுதினார்.[15] ஸ்டாட் என்பவர் கூடுதலாக, "எப்போதெல்லாம், ஞானஸ்நானம் நடைபெறும் பொருள் பற்றிய குறிப்பிடுதலின்றி 'baptism' மற்றும் 'being baptized' என்ற வார்த்தைகள் வருகின்றனவோ, அப்போதெல்லாம் அது தண்ணீர் ஞானஸ்நானம் பற்றிய குறிப்பாகவே உள்ளது" என்று கூறினார்.[16] இவ்வாறாக, இவ்வசனப்பகுதியில், "baptized" என்பதை நாம் "முழுக்காட்டப்படுதல்" என்று மொழிபெயர்க்கக்கூடும் என்பது மாத்திரமல்ல, ஆனால் அத்துடன் நாம் "[தண்ணீருக்குள்]" என்ற வார்த்தையையும் சட்டப்பூர்வமாகக் கூட்ட முடியும்.

சில எழுத்தாளர்கள், இந்த இடத்தில் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பவுல் அறிமுகப்படுத்தியது பற்றி வியப்படைகின்றனர். ஒருவர், "அவர், 'கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக *விசுவாசம் கொண்டுள்ள* நாமனைவரும் அவருடைய

மரணத்துக்குள்ளாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளோம்' என்றும் 'நமது *விசுவா சத்தின்* மூலமாக நாம் அவருடன் அடக்கம்பண்ணப்பட்டோம்' என்றும் கூறுவாரென எதிர்பார்த்திருக்கலாம்" என்று கூறினார்.[17] இருப்பினும், 1 முதல் 5 வரையிலான வசனங்களில் "விசுவாசம்" என்பதை "விசுவாசம் மாத்திரம்" என்று விளக்கம் அளித்திருப்பவர்களுக்கு மாத்திரமே, இவ்விடத்தில் ஞானஸ்நானத்தை அறிமுகம் செய்வித்தது வியப்பளிப்பதாக இருக்கும். இரட்சிக்கும் விசுவாசம் என்பது கீழ்ப்படிதலையும் உள்ளடக்குகிறது (ரோமர் 1:5; 16:26) என்பதைப் புரிந்துகொண்டிருப்பவர்களுக்கு, விசுவாசத்தினுடைய வெளிப்பாடாகப் பவுல் ஞானஸ்நானத்தைப் பற்றிப் பேசுவார் என்பது வியப்பளிப்பதாக இருக்காது. பிரதான கட்டளையைக் கொடுத்ததில், விசுவாசம், ஞானஸ்நானம் மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றை இயேசு ஒன்றிணைத்தார்: "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16).

ஞானஸ்நானத்தைச் சுற்றிச்சூழ்ந்துள்ள நேர்மாறுகளில் மிக அதிக மானவை, தேவன் கொடுத்த இந்த கட்டளை குறித்து மக்கள் சென்றுள்ள மிக அதிகமான தூரத்தில் இருந்து கிளைத்துள்ளன. கத்தோலிக்கர்கள் ஒரு அதிக முனைக்குச் சென்று, ஞானஸ்நானத்தை "புனிதச்சடங்கு" - அதாவது இதில் பங்கேற்பவர்களுக்குக் கிருபையைக் கொண்டுவரும் ஒரு சடங்காச்சாரம், இது விசுவாசத்திலிருந்து பிரிக்கப்பட்டதாகவும் தனித்து நிற்பதாகவும் உள்ளது - என்றாக்கியுள்ளனர். அவர்கள் "குழந்தைகளை" ஞானஸ்நானப்படுத்தி அந்தக் குழந்தைகளின் ஆத்துமாக்களை "இருட்டுஸ்தலத்தில்" இருந்து இரட்சிக்க முடியும் என்று நம்புகின்றனர். புரொட்டஸ்டன்டுகள் இன்னொரு அதிக முனைக்குச் சென்று, ஞானஸ்நானம் என்பது ஒரு அடையாளம் என்பதைவிடச் சற்றே அதிகமானதாக மாத்திரம் உள்ளது என்று நினைக்கின்றனர். நான் ஒரு இளம் பையனாக இருந்தபோது, நாமகரணக்கூட்டப் பிரசங்கியார்கள், ஞானஸ்நானத்தை "உள்ளான சுத்திகரிப்புக்கான புறம்பான ஒரு அடையாளம்" என்று அடிக்கடி குறிப்பிட்டனர். இந்த இரு அதிக முனைத் தூரங்களுக்கு இடையில், ஞானஸ்நானம் பற்றி வேதாகமத்தின் நிலைப்பாடு பின்வரு மாறு உள்ளது: இது *விசுவாசத்தின்* வெளிப்பாடாக உள்ளது (அந்த விசுவாசம் இல்லாத நிலையில் இதற்கு மதிப்பு இல்லை) மற்றும் இது இரட்சிப்புக்குத் தேவனால் தரப்பட்ட *நிபந்தனையாக* உள்ளது. 6:3, 4ஐக் காட்டிலும் அதிகமாக வேதாகம ஞானஸ்நானம்பற்றி மிகச்சிறந்த விளக்கம்தரும் வேதவசனம் வேறு எதுவும் இருப்பதில்லை.

**ஒரு விளைவு**

இவ்வசனப்பகுதி, "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் ..." என்று தொடங்குகிறது (வசனம் 3அ). பவுல் (இந்த நிருபத்தை எழுதிய வேளையில்) ஒருக்காலும் ரோமாபுரிக்குச் சென்றிருந்த தில்லை (1:13), ஆனால், அவர் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்ததாக கணக்கிட்டார். இது, இயேசுவில் விசுவாசம் கொண்டிருப்பவர்களுக்கு ஞானஸ்நானம் என்பது பொதுவான பதில்செயலாக இருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. F. F. புரூஸ் என்பவர், "பவுலின் எழுத்துக்களில், ஞானஸ்நானம் பற்றிய இந்த மற்றும் பிறகுறிப்புகளிலிருந்து,

அவர் ஞானஸ்நானத்தைக் கிறிஸ்தவ வாழ்வின் 'விருப்பத்தேர்வான ஒரு உபரி' என்று மதிக்கவில்லை என்பது தெளிவாகிறது" என்று எழுதினார்.[18] புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், "ஞானஸ்நானம் பெற்றிராத கிறிஸ்தவர்" என்பது போன்ற விஷயம் இருந்ததில்லை.

பவுல், "ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும்" என்று குறிப்பிட்ட போது, தம்மையும் அவர் ஞானஸ்நானம் பெற்றிருந்தவர்களுடைய எண்ணிக்கையில் உள்ளடக்கினார் என்பதைக் கவனியுங்கள். முப்பது அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான வருடங்களுக்கு முன்பு, ஏவுதல் பெற்றிருந்த ஒரு பிரசங்கியார் அவரிடத்தில், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறியிருந்தார் (நடபடிகள் 22:16). அந்த வேளையில், "அவர் எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றார்" (நடபடிகள் 9:18).

ஞானஸ்நானம் பெற்றிருந்த தம்மையும் மற்றவர்களையும் குறிப்பிட்ட அவர், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் ..." என்று கூறினார் (ரோமர் 6:3).[19] "கிறிஸ்துவுக்குள்" இருத்தல் என்பது இயேசுவுடன் தனிப்பட்ட உறவைக் கொண்டிருத்தல் என்று அர்த்தப்படுகிறது (யோவான் 15:5ஐக் காணவும்). கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்று கூறினார் (கலாத்தியர் 3:27). இயேசுவுடனான இந்த தனிப்பட்ட, இரட்சிக்கும் உறவு ரோமர் 6ம் அதிகாரம் முழுவதிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது:

> வசனம் 3 - "கிறிஸ்து இயேசு*வுக்குள்ளாக* ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை ... ."
> வசனம் 4 - "... ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்து*வுடனேகூட* அடக்கம் பண்ணப்பட்டோம்."
> வசனம் 5 - "... *அவருடன்* இணைக்கப்பட்டிருக்கிறோம்."
> வசனம் 6 - "... *அவரோடுகூடச்* சிலுவையிலறையப்பட்டது. ..."
> வசனம் 8 - "... கிறிஸ்து*வுடனேகூட* நாம் மரித்தோமானால், அவரு*டனேகூடப்* பிழைத்தும் இருப்போம்."

வில்லியம் பார்க்ளே என்பவர், "நாம் காற்றினுள்ளும், காற்று நம்முள்ளுமிருந்தால் ஒழிய, நமது உடல்ரீதியான வாழ்வை வாழ இயலாது; [அதுபோலவே] நாம் கிறிஸ்துவுக்குள்ளும் கிறிஸ்து நமக்குள்ளுமிருந்தால் ஒழிய [கொலோசெயர் 1:27ஐக் காணவும்], நாம் தேவனுடைய வாழ்வை வாழ இயலாது" என்று எழுதினார்.[20]


3ம் வசனத்தின் இந்த இடம்வரையில், பவுல் தமது வாசகர்கள் ஏற்கனவே அறிந்திருந்ததையே கூறியிருந்தார். அவர் இந்த வாக்கியத்தை முடிக்கையில், அவர்கள் சிந்தித்திராத சிலவற்றை அவர்களுக்கு அவர் கூறினார்: அதாவது, கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும், "அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருந்தனர்" (வசனம் 3இ). இவ்வாறு பவுல், இந்தக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு மற்றும் எப்போது "பாவத்திற்கு

*மரித்தனர்" என்பது பற்றிய தமது கலந்துரையாடலைத் துவக்கினார். அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது, அவர்கள் இயேசுவின் மரணத்திலும் அதன் விளைவுகளிலும் பங்கேற்றனர்.*


*பவுல், 1 கொரிந்தியர் 15ல், கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவையே சுவிசேஷத்தின் இருதயம்போன்ற மையப் பகுதி யாக உள்ளது என்று எழுதினார்:*

> *அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறு படியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; ...*
>
> *நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங் களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து (1 கொரிந்தியர் 15:1-4).*

*சுவிசேஷச் செய்தியின் கூறுகள் பின்வரும் வரைபடத்தில் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன. "ம" என்பது "மரணம்" என்பதற்கானதாகவும், "அ" என்பது "அடக்கம்" மற்றும் "உ" என்பது "உயிர்த்தெழுதல்" என்பவற்றிற் கானவைகளாகவும் உள்ளன.*




*ரோமர் 6ல், பவுல் நமது ஞானஸ்நானம் செயல்விளைவில் எவ்வாறு கணநேர நிகழ்ச்சிகளின் மறுஜென்மமாக உள்ளது என்று காண்பித்தார். முதலாவது, நாம் கீழே கருத்தாகத் தெரிவித்துள்ளபடி, இயேசுவின் மரணத்தில் பங்கேற்கிறோம்:*





*நாம் பாவத்தில் மரித்திருந்தோம் (எபேசியர் 2:1), ஆனால் ஞானஸ்நானத்தில், நாம் பாவத்திற்கு மரிக்கிறோம். 6ம் வசனத்தில் பவுல், "நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது" என்று கூறினார்.*

*இயேசு மரித்தபின்பு, அவர் அடக்கம்பண்ணப்பட்டார். பவுல் பின்வரும்*

இணைவைத் தரவழைத்தார்: "அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (வசனம் 4இ). பெரும்பான்மையான எழுத்தாளர்கள், அடக்கம் பற்றிய உருவகமானது தண்ணீருக்குள் நாம் அமிழ்த்தப்படுதலுக்கு இணையாக உள்ளது என்று ஒப்புக்கொள்கின்றனர். ஜேம்ஸ் மெக்நைட் என்பவர், "ஞானஸ்நானத்தில் ... ஞானஸ்நானம் பெறுபவர் தண்ணீருக்குக் கீழே அடக்கம்பண்ணப்படுகிறார்" என்று எழுதினார்.[21] தெளித்தலை நடைமுறைப்படுத்துபவர்களும்கூட, "தெளித்தல் என்பது அடக்கத்தின் அடையாளத்துவத்திற்குத் தன்னைக் கொடுப்பதில்லை"[22] என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும்.


நாம் ஞானஸ்நானத்தின் தண்ணீரில் அடக்கம்பண்ணப்படும்போது, பாவத்திற்கு மரித்தல் என்ற செயல்முறை நிறைவுபடுத்தப்படுகிறது:




தண்ணீருக்குள்ளான இந்த அடக்கம்பண்ணப்படுதலானது "மரணத்திற்குள்ளானதாக" உள்ளது என்று பவுல் வலியுறுத்தினார் (வசனம் 4ஆ), இது நாம் செய்யும் விஷயம் மற்றும் கிறிஸ்து செய்த விஷயம் ஆகியவற்றிற்கு இடையிலான நெருங்கிய தொடர்பைத் திரும்பவும் முக்கியத்துவப்படுத்துகிறது. "அவருக்கு நடந்த எல்லாம் நமக்கு நடக்கிறது என்று கருதப்படலாம்."[23]

மூன்றாம் நாளில், கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தார். இவ்வாறாகப் பவுல், "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு," என்று தொடர்ந்தார் (வசனம் 4அ, ஆ). கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டதுபோல, நாமும் ஞானஸ்நானத்தின் "தண்ணீர்க் கல்லறையில்" இருந்து உயிர்ப்பிக்கப்படுகிறோம். கொலோசெயருக்குப் பவுல், "ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்று கூறினார் (கொலோசெயர் 2:12).

இந்த மறுசெயல் விளக்கப்படுத்தலின் நிறைவானது பின்வருமாறு சித்தரிக்கப்பட்டுள்ளது:




ஞானஸ்நானம் பற்றிப் பவுல் ரோமர் 6ல் போதித்ததன்மீது ஆண்டர்ஸ் நைக்ரென் என்பவர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> ஞானஸ்நானம் பெறுபவர் தண்ணீருக்குள் முழுக்காட்டப்படும்போது, அந்த செயலானது ''கிறிஸ்துவுடன்'' அடக்கம்பண்ணப்படுதலை அடையாளப்படுத்துகிறது; மற்றும் அவர் தண்ணீல் இருந்து வெளியே வரும்போது, அது ''கிறிஸ்துவுடன்'' உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகிறது. ஆனால் ஒருவர் அந்தக் காரணத்திற்காக, ஞானஸ்நானம் பற்றிய பவுலின் கண்ணோட்டத்தை, அவ்வார்த்தை பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற கருத்தில் ''அடையாளத்துவம்'' என்ற வகையில் பண்புபடுத்தினால், அது முற்றிலும் தவறான பிரதிநிதித்துவப்படுத்துதலாக இருக்கும். ஏனெனில் பவுலின் கூற்றுப்படி, ஞானஸ்நானத்தில் நாம் அடையாளத்துவப் பிரதி நிதித்துவப்படுத்துதல்களுடன் மாத்திரமின்றி, உண்மை நிலைகளுடனும் செயல்பட வேண்டியுள்ளது. ஞானஸ்நானம் அடையாளத்துவப்படுத்தும் விஷயம் உண்மையிலேயே <u>நடைபெறுகிறது,</u> மற்றும் ஞானஸ்நானத்தின் மூலம் மிகச்சரியாக நடைபெறுகிறது. ... [நாம்] கிறிஸ்துவின் சரீரத்தில் முறைப்படியான உறுப்பினர்களாக இதற்கு முன்பு இருந்ததில்லை; ஆனால் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் அவ்வாறு ஆனோம் மற்றும் இனிநாம் பிரிக்க இயலாத அளவுக்கு தலையுடன் உறவுகொண்டுள்ளோம்.[24]

நான் முன்பே கூறியபடி, 6:3, 4 ஞானஸ்நானம் மற்றும் நமது இரட்சிப் பிற்குத் தேவனுடைய ஏற்பாட்டில் அதன் இடம் ஆகியவற்றைப் பற்றிய வல்லமைநிறைந்த வசனப்பகுதியாக உள்ளது. பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் அவ்வசனப்பகுதியின் வல்லமையை மறுக்க முடிவ தில்லை. அவர்கள் ஞானஸ்நானம் விசுவாசத்தின் பதில்செயலில் ஒரு *அத்தியா வசியமான* பாகமாக உள்ளது என்று கூறத்தயங்குகின்றனர், ஆனால் பலர் அப்படிப்பட்ட விஷயம் உண்மையானது என்று ஒப்புக்கொள்வதற்கு வெகு அருகாமையில் உள்ளனர்:

- “புதிய ஏற்பாடானது தண்ணீர் ஞானஸ்நானத்தை, பெரிய அனுபவத்தின் ஒரு கூறாக முன்னிறுத்துகிறது, இதை [ஜேம்ஸ்] டன் என்பவர் ‘மனமாற்றத்திற்கான தொடக்கநிலை’ என்று அழைக்கிறார்” (டக்ளஸ் J. மூ).[25]
- “கிறிஸ்துவுக்குள் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் என்பவை, முழுமையானதின் பகுதிகளே தவிர, அவை இரண்டு தனித்தனி அனுபவங்கள் அல்ல” (F. F. புரூஸ்).[26]
- “[புதிய ஏற்பாட்டு எழுதப்பட்டுக்கொண்டிருந்த] காலத்தில் ஞானஸ்நானமும் மனமாற்றமும் ஒரு நிகழ்வின் இருபாகங்கள் என்று கருதப்படும் அளவுக்கு, மனமாற்றத்தை ஞானஸ்நானம் மிகநெருக்கமாகப் பின்தொடர்ந்தது ...” (வால்ட்டர் W. வெஸ்ஸெல்).[27]

இருப்பினும், ஞானஸ்நானத்தின் அத்தியாவசியத்தை நிரூபித்தல் என்பது நமது வேதவசனப்பகுதியில் பவுலின் நோக்கமாக இருக்கவில்லை; அவரது நிருபத்தின் தொடக்ககால வாசகர்களில் எவரும் ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றிக் கேள்வி கேட்கவில்லை. நமது பாவங்கள் கழுவப்பட்டன என்று நாம் அறிந்து கொண்டதானது, நாம் தேவபக்தியுள்ள வாழ்வை வாழும்படி நம்மை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதே பவுலின் கருத்தாக இருந்தது. நாம் “புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து[28] கொள்ளும்படிக்கு” நாம் ஞானஸ்நானத் தண்ணீரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டோம் என்று அவர் கூறினார் (வசனம் 4ஆ).

நாம் “கிறிஸ்துவுக்குள்” ஞானஸ்நானப்படுத்தப்பட்டோம் (வசனம் 3அ). “கிறிஸ்துவுக்குள்” நாம் “புதுசிருஷ்டியாயிருக்கி[றோம்]; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2 கொரிந்தியர் 5:17). நாம் தேவனுடன் புதிய உறவுகொண்டிருக்கிறோம்; நாம் புதிய ஆசீர்வாதங்களைக் கொண்டிருக்கிறோம்; நாம் புதிய வல்லமையைக் கொண்டிருக்கிறோம். “எல்லாம் புதிதாயின” (2 கொரிந்தியர் 5:17)! எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபின்பு, “சந்தோஷத்தோடே தன் வழியே போ[னதில்]” வியப்பு எதுவுமில்லை (நடபடிகள் 8:39).

நாம் “புதிய ஜீவனை” கொண்டுள்ளதால், நாம் அதைப்போல் *செயல்பட* வேண்டும். உறவுமுறையில் மாற்றம் என்பது நமது வாழ்வில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். NEB வேதாகமம், நாம் “நமது பாதங்களை வாழ்வின் புதிய பாதையில் அமைத்தல்” அவசியம் என்று குறிப்பிடுகிறது (வசனம் 4ஆ). கொலோசெயர்களின் ஞானஸ்நானம் குறித்துப் பவுல் அவர்களுக்குப் பின்வருமாறு எழுதினார்,

> நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலோசெயர் 3:1-3).

கிளென் பேஸ் என்பவர் குறிப்பிட்ட ஒரு பெண்ணின் ஞானஸ்நானம் பற்றிக்கூறினார். அவளை அவர் தண்ணீரிலிருந்து எழுப்பியபோது, அவள் தனது

*கைகளை வானத்தை நோக்கி உயர்த்தி, "தேவனே, எனது எஞ்சிய நாட்களில் நான் விசுவாசத்தில் நிலைத்திருக்க உதவிசெய்யும்!" என்று கூறினாள்.*[29] *அது நாம் ஒவ்வொருவரும் ஜெபிக்க வேண்டிய ஜெபமாக உள்ளது.*

## *முடிவுரை*

*நமது அடுத்த பாடத்தில், நாம் நமது ஞானஸ்நானத்தின்போது என்ன நடைபெறுகிறது என்பது பற்றியும் இது நமது வாழ்வில் கொண்டிருக்க வேண்டிய செயல்விளைவுகள் பற்றியுமான நமது கலந்துரையாடலை விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்குவோம். இப்போதைக்கு, நாம் 6ம் வசனத்தை முன்னதாகக் கண்ணோட்டமிடுவோமாக: "... நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்." அவ்வசனத்தின் உணர்வுகள், கலாத்தியர் 2:20ல் பவுலின் வார்த்தைகளில் பிரதிபலிக்கிறது: "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக் கிறார். ..."*

*தேவபக்தியற்ற ஒழுக்கக்கேடான வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்த ஒரு மனிதர் இயேசுவில் விசுவாசம் கொள்ள வந்தார். அதன் விளைவாக, அவரது வாழ்வு மாறிற்று. ஒருநாள், அவர் தெருவில் நடந்து கொண்டிருந்தபோது, கடந்தகாலத்தில் தான் வேசித்தனம் செய்திருந்த ஒரு பெண்ணைச் சந்தித்தார். அந்தப்பெண் அவரைநோக்கிக் கவர்ந்திழுக்கும் வகையில் புன்னகைத்தாள். அதற்கு அவர் பதில்செயல் செய்யத் தவறியபோது, அவள் "என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? அது* நான்தான்*" என்று சொன்னாள். அவரோ புறம்பே நடந்துகொண்டே, "ஆம், ஆனால் இனி* நானல்ல*" என்று கூறினார்.*[30]

*"தேவனுடைய இரங்கல் பத்தி" என்ற நமது இந்தப்பாடத்தை, நாம் ஒரு கேள்வியுடன் முடிப்போம்: "*உங்கள்* பெயர் 'தேவனுடைய இரங்கல் பத்தியில்' இடம்பெற்றுள்ளதா?" நீங்கள் மனஸ்தாபப்பட்ட விசுவாசி என்ற வகையில் ஞானஸ்நானம் பெற்று உங்கள் பாவத்திற்கு மரித்திருக்கிறீர்களா? நீங்கள் வேதவசனத்தின்படியான ஞானஸ்நானம் பெற்றிருந்தால், தேவன் புதிதான ஜீவனைக் கொடுத்துள்ள வகையில்* வாழ்ந்திருக்கிறீர்களா*? உங்கள் பெயர் "தேவனுடைய இரங்கல் பத்தியில்" இல்லையென்றால், நீங்கள் இன்றே கர்த்தரிடம் வரும்படி - அல்லது அவரிடத்தில் திரும்பும்படி - நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.*

## *பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்*

*இந்தப் பாடமும் இதைத்தொடர்ந்து வரும் இரண்டு பாடங்களும் ஒரு பாடமாக ஒன்றிணைக்கப்பட முடியும், இதற்கு இந்தப் பாடத்தின் அல்லது இதைத் தொடர்ந்து வரும் பாடத்தின் தலைப்பு மற்றும் ஆய்வுக்கருத்துக்களைப் பயன்படுத்தலாம். ரோமர் 6 முழுவதும் அல்லது பகுதிகளும் முழுமையாகப் படிக்கப்படுவதற்குக் கூடுதலான வழிகளும் உள்ளன. "நீங்கள் பாவம் செய்யக்கூடாது என்பதற்கான காரணங்கள்" என்ற தலைப்பில் நீங்கள் போதிக்க அல்லது பிரசங்கிக்க முடியும். காய் ரோப்பர் என்பவர், இந்த அதிகாரத்தின் மீதான தமது பிரசங்கத்திற்கு "மாபெரும் மாற்றம்"*[31]

என்று தலைப்புக்கொடுத்தார். சில எழுத்தாளர்கள் "அறிதல்" என்ற வார்த்தைக்கு வலியுறுத்தம் அளிக்கின்றனர்: "நீங்கள் அறியவேண்டிய நான்கு விஷயங்கள்" (6:3, 6, 9, 16 ஆகியவற்றைக் காணவும்). "இல்லாத மற்றும் ஒருக்காலும் இருக்கக்கூடாத மூன்று விஷயங்கள்" (6:1, 2, 15; 7:7 ஆகியவற்றைக் காணவும்) என்பது பற்றிப் பேசுதல் இன்னொரு அணுகுமுறையாக இருக்கலாம்.

சில எழுத்தாளர்கள், கிறிஸ்தவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஞானஸ்நானம் என்ற வழக்கமானது, மாயா வாத மதங்கள் மற்றும்/அல்லது யூதத்துவச் சடங்காச்சாரக் கழுவுதல்கள் என்பவற்றிலிருந்து "கடனாக" பெறப்பட்டுள்ளது என்று கூறி, ஞானஸ்நானம் பற்றிய பவுலின் போதனைக்கு கனக்குறைவை ஏற்படுத்துகின்றனர். புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் மற்றும் யூதர்கள் அல்லது விக்கிரக ஆராதனை செய்பவர்கள் ஆகியோரின் சடங்குகள் ஆகியவற்றிற்கு இடையில் பல வேறுபாடுகள் உள்ளன - ஆனால், இதைப் பட்டியலிடுதல் என்பது விசுவாசிப்பவருக்குத் தேவையற்றதாக உள்ளது. ரோமர் 6ஐப் பவுல் எழுதும்படிக்கு அவரைப் பரிசுத்த ஆவியானவரே ஏவினார் என்று அறிதல் போதுமானதாக உள்ளது. வேதாகமத்தில் நாம் வாசிக்கும் ஞானஸ்நானம் மனிதரிடத்தில் இருந்தல்ல, ஆனால் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளது.

---

குறிப்புகள்

[1]அங்கு எழுந்து நின்றிருந்த Melvin Daniels என்ற பிரசங்கியாரால், இந்த வரலாறு எனக்கு 1989ம் ஆண்டுவாக்கில் எடுத்து உரைக்கப்பட்டது. [2]The information on *hagiasmos* and *hagios* is based on *The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 3; W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 307, 544-45. [3]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 86. [4]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 49. [5]This idea was taken from Jim Hylton, *Just Dying to Live* (Kalamazoo, Mich.: Master's Press, 1976), 49. [6]பெரும்பாலான சமுதாயங்களில், அந்தப் பகுதியின் மரணங்களை சமூகத்தினருக்கு அறிவிப்பிதற்கு சில வழிமுறைகள் உள்ளன. இந்தப் பாடத்தை அறிமுகப்படுத்த, நீங்கள் வாழும் பகுதியிலுள்ள வழிமுறையை உங்கள் உருவகமாக பயன்படுத்துங்கள். [7]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 131; F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 127. [8]Sermon preached by Glen Pace at Judsonia church of Christ, Judsonia, Arkansas, n.d. (c. 2001). [9]Briscoe, 130. [10]Quoted in Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 114.

[11]Hylton, 49. [12]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World*, The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 168. [13]*The Analytical Greek Lexicon*, 65. [14]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 531. [15]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 196. [16]Stott, 173. [17]Moo, 196. [18]Bruce, 128. [19]Blessings found "in Christ" are listed in Jimmy Allen, *Survey of Romans,* 4th ed., rev. (Searcy, Ark.: By the author, 1973), 64. [20]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The

Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 86.

[21]James Macknight, *A New Literal Translation, from the Original Greek of All the Apostolical Epistles with a Commentary and Notes* (N.p.: n.d.; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 84. [22]Barclay, 84. [23]Macknight, 85. [24]Anders Nygren, *Commentary on Romans* (Philadelphia: Fortress Press, 1949), 233-34. [25]Moo, 204; James D. G. Dunn, *Baptism in the Holy Spirit* (London: SCM, 1970), 145. [26]Bruce, 129. [27]Walter W. Wessel, notes on Romans, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1713. [28]*“நடத்தல் என்பது கிறிஸ்தவ வாழ்வைப் பண்புபடுத்தும் உறுதியான காட்சிப்படுத்தலாகாத வளர்ச்சிக்கு உருவகமாக” உள்ளது* (Morris, 249). [29]Adapted from Glen Pace, sermon preached at Judsonia church of Christ, Judsonia, Arkansas, n.d. (c. 2000). [30]*இது பல ஆதாரமூலங்களில் லத்தீன் சபைப் பிதாக்களில் குறிப்பிடத்தக்கவரால் அகுஸ்தீன் (கி.பி. 354-430) என்பவரைப் பற்றிய வரலாறாக மறுபடியும் கூறப்பட்டதாக உள்ளது.*

[31]Coy Roper, “The Great Transformation,” *Truth for Today* (August 1988): 3.